## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

# ஆண்டறிக்கை 1997-98

©

தமிழ்நாடு அரசு

1998

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# ஆண்டறிக்கை 1997-98

# 1997-1998 ஆம் ஆண்டு ஆண்டறிக்கை

**முன்னுரை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்பு பிரிவு 315-இன்படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர்கள்—11 என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், எட்டு உறுப்பினர்களும் உள்ளனர்.

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| திரு. | து. முருகராஜ், இ.ஆ.ப. (ஓய்வு) | தலைவர் |
| திரு. | ஆர். வேலு, இ.ஆ.ப. (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. | ஆர். குருசாமி, பி.ஏ,பி.எல். | உறுப்பினர் |
| பேராசிரியர். | ஜி. அரங்கநாதன், எம்.ஏ.எம்.பில். | உறுப்பினர். |
| பேராசிரியர் | டாக்டர் எஸ். பாலசுப்பிரமணியன்,<br>எம்.ஏ.,எம்.பில்.பிஎச்டி.டி.எஸ்.எஸ். | உறுப்பினர் |
| திரு. | எம். நாகூர்மீரான், பி.எஸ்.ஸி.,பி.எல். | உறுப்பினர். |
| டாக்டர் | (திருமதி) ஜோதிபாய் செல்வின் ராஜ்,<br>எம்.எஸ்.சி. பி.எச்.டி. எம்.எட். | உறுப்பினர் |
| திரு. | ஆர். சுந்தரம், பி.ஏ., பி.எல்., - | உறுப்பினர் |
| திரு. | எம். மணி, இ.கா.ப. (ஓய்வு) - | உறுப்பினர் |
| திரு. | ஆர். குப்புசாமி, இ.ஆ.ப. - | செயலாளர். |
| திரு. | சந்திரகாந்த் பி. காம்ப்ளே, இ.ஆ.ப.<br>தேர்வு கட்டுப்பாடு அலுவலர் (31-12-1996 மு.ப. முதல் 1-7-1997பி.ப. வரை) | |
| திருமதி | சாலினி வசிஸ்ட், இ.ஆ.ப.,<br>தேர்வு கட்டுப்பாடு அலுவலர் (7-7-1997 மு.ப. முதல்) | |

மார்ச் 31, 1998-ன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு-1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## பகுதி - 1

**செயல்களும் கடமைகளும்:**

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-ல் குறிப்பிடப்பட்டுள்ளன

மாநிலப் பணிகளில் பணிநியமனம் பெற உரிய தேர்வுகளைத் தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளருக்குப் பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத் துறை சார்பாக டேராடூனில் உள்ள இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

**வேலைப் பளு:**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**1. நேரடித் தேர்வு :**

**1.** முதல் நிலைத் தேர்வு—

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | .. | 5 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | .. | 922 |
| பெறப்பட்ட விண்ணப்பங்கள் | .. | 1,43,510 |
| பரிந்துரை செய்யப்பட்டவர்கள் | .. | 9220 |

**2.** முதன்மை எழுத்துத் தேர்வு—

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | .. | 24 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | .. | 1,568 |
| பெறப்பட்ட விண்ணப்பங்கள் | .. | 26,686 |
| பரிந்துரை செய்யப்பட்டவர்கள் | .. | 4,704 |

**3.** நேர்முகத் தேர்வு—

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | .. | 28 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | .. | 1,343 |
| தேர்வுகளில் கலந்து கொண்டவர்கள் | .. | 3,330 |

**4,** இறுதி நிலைத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்கள்—

| | | |
|---|---|---|
| முடிவு செய்த தேர்வுகளின் எண்ணிக்கை | .. | 30 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | .. | 2,019 |
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | .. | 84,434 |
| முதல் நிலைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | .. | 62,612 |
| முதன்மை எழுத்துத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | .. | 16,170 |
| வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | .. | 3,142 |
| தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | .. | 1,762 |

## 2. இதர தேர்வு விவரங்கள்:

| | 1997 மே | டிசம்பர் |
|---|---|---|
| 1. துறைத் தேர்வு | | |
| விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 58,266 | 53,885 |
| வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை | 18,452 | 18,333 |

**அரையாண்டுத் தேர்வு:**

| | | |
|---|---|---|
| 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 48 | |
| 1998 ஆம் ஆண்டு மார்ச் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 50 | |
| 3. கல்வித் தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது | 121 | நேர்வுகள் |
| 4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் | 1248 | நபர்கள் |
| 5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல் அமைச்சுப் பணியில் | 211 | நபர்கள் |
| 6. ஒழுங்கு நடவடிக்கை | | |
| தேர்வாணையம் கருத்து தெரிவித்த வழக்குகள் | 587 | நேர்வுகள் |
| 7. ஒழுங்கு முறை விதி 16 (பி) பிற்பகுதியின் கீழ் | | |
| நியமனம் செய்தவை | 1162 | நேர்வுகள் |
| 8. வரவு மற்றும் செலவு. | (ரூபாய் ஆயிரங்களில்) | |
| வரவு | 1,57,89 | |
| செலவு | 8,45,90 | |

வரவு செலவின விவரங்கள் பின் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 9. அறிவிக்கைகள்:

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 37 பதவிகளுக்கான 1,128 காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 37 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. இவ்வாறு வெளியிடப்பட்ட 37 பதவிகளுக்கான அறிவிக்கை பட்டியல், காலியிடங்களின் எண்ணிக்கையுடன் பின் இணைப்பு-4ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 10. சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள்:

மற்ற ஒத்த பணியமைப்பு உடைய நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும், தேர்வு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் இத் தேர்வாணையம் அவ்வப்பொழுது ஆராய்ந்து தனது தெரிவு முறைகளில் உரிய மாற்றங்களைச் செய்து வருகின்றது.

# பகுதி -2

## நேரடித் தெரிவுகள்:

அறிக்கைக்குரிய ஆண்டில் 922 காலியிடங்களுக்கான 5 தெரிவுகளுக்கு முதல் நிலைத் தேர்வுகள் நடத்தப்பட்டன. 1,43,510 விண்ணப்பதாரர்கள் முதல்நிலைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். 1568 காலியிடங்களுக்கான 24 தெரிவுகளில் முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. 26,686 விண்ணப்பதாரர்கள் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். 1343 காலியிடங்கள் அடங்கிய 28 தெரிவிற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. 3330 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். தேர்வாணையம் இறுதியாக 30 தெரிவுகளுக்கு முடிவினை அறிவித்தது. 2019 காலியிடங்களுக்கு இறுதியாக 1762 விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தது. 30 தெரிவுகளின் புள்ளி விவரம் பின் இண்ணப்பு 2இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அறிக்கைக்குரிய ஆண்டில் முடிக்கப்பட்ட சில முக்கிய பதவிகளின் தெரிவு விவரம்**

| வரிசை எண். 1. | பதவியின் பெயர் 2. | காலியிடங்களின் எண்ணிக்கை 3. | தெரிவு செய்யப் பட்ட நபர்கள் 4. |
|---|---|---|---|
| 1. | உதவி அறுவை மருத்துவர் (பொது மற்றும் தனித்தன்மை) | 757 | 750 |
| 2. | உரிமை இயல் நீதிபதி | 100 | 71 |
| 3. | உதவிப் பொறியாளர் (சிவில்) நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி | 217 | 217 |
| 4. | உதவி பல் மருத்துவர் | 60 | 59 |
| 5. | உந்தூர்திப் பொறியாளர் நிலை-இரண்டு | 58 | 57 |
| 6. | தொகுதி ஒன்று பணிகள் | 30 | 30 |
| 7. | ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள்-ஒன்று | 305 | 285 |

## தொகுதிப் பணிகள்

*தொகுதி ஒன்று பணிகள்:*—(அ) தேர்வாணையம் தொகுதி ஒன்று பணியில் 30 காலியிடங்களுக்கு 30.4.96 அன்று விளம்பரப்படுத்தியது. 26,269 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதல்நிலைத் தேர்வு 27.10.96 அன்று நடைபெற்றது. முதல்நிலைத் தேர்வின் அடிப்படையில் 301 விண்ணப்பதாரர்கள் முதன்மை தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். முதன்மைத் தேர்வு 14.6.97 முதல் 27.6.97 வரை நடைபெற்றது. நேர்முகத் தேர்வு 17.12.97 மற்றும் 18.12.97 அன்று நடைப்பெற்றது. இறுதியாக 30 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (ஆ) தேர்வாணையம் தொகுதி ஒன்று பணியில் 42 காலியிடங்களுக்கு 7.7.97 அன்று விளம்பரப்படுத்தியது. 46,193 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதல்நிலைத் தேர்வு 22.6.97 அன்று நடைபெற்றது. முதன்மை எழுத்துத் தேர்வு 19.5.98 முதல் 12.6.98 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (இ) மேலும், மேற்படி தொகுதி ஒன்றில் அடங்கிய பதவிகளுக்கான 84 பணியிடங்கள் 7.1.98 அன்று விளம்பரப்படுத்தபட்டு, 67,000 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. இதற்கான முதன்மைத் தேர்வு 1998, ஜூன் மாதம் நடத்தப்படவுள்ளது.

*ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் ஒன்று:-* (அ) தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள்-ஒன்றில் 305 காலியிடங்களை நிரப்ப விளம்பரப்படுத்தப்பட்டதில் 34,665 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதல்நிலைத் தேர்வு 4.2.96 அன்று நடைபெற்றது. முதல்நிலைத் தேர்வின் அடிப்படையில் 2,700 விண்ணப்பதாரர்கள் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். முதன்மைத் தேர்வு 16.8.96 முதல் 18.8.96 வரை நடைபெற்றது. இறுதியாக 285 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஆ) தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணி - 1-ல் 626 காலியிடங்களுக்கு 29.3.97 அன்று விளம்பரப்படுத்தியது, 55,524 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதல்நிலைத் தேர்வு 22.6.97ல் நடைபெற்றது.

*தொகுதி நான்கு பணிகள்:* (அ) தேர்வாணையம் தொகுதி நான்கு பணியில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 பதவியில் 362 காலியிடங்களுக்கு 30.8.96 அன்று விளம்பரப்படுத்தியது. 1,402 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மை எழுத்துத் தேர்வு 23.2.97 அன்று நடைபெற்றது. முதன்மைத் தேர்வின் அடிப்படையில் இறுதியாக 167 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஆ) தேர்வாணையம் தொகுதி நான்கு பணியில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியில் 500 காலியிடங்களுக்கு 28.10.96 அன்று விளம்பரப்படுத்தியது. 4,03,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 2.3.97 அன்று முதல்நிலைத் தேர்வு நடைபெற்றது. முதன்மைத் தேர்வு 21.12.97 அன்று நடைபெற்றது.

*முதல்நிலைத் தேர்வுகள்:-* அறிக்கைக்குரிய ஆண்டில் 5 வகைப் பணிகளில் 922 காலியிடங்களை நிரப்ப 5 முதல்நிலைத் தேர்வுகள் நடத்தப்பட்டன. 1,43,510 விண்ணப்பதாரர்கள் முதல்நிலைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

*முதன்மை எழுத்துத் தேர்வுகள்:-* அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 1,568 காலியிடங்களை நிரப்புவதற்கு 24 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 26,686 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

## வாய்மொழித் தேர்வு:-

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 1,343 காலியிடங்களை நிரப்ப 28 பதவிகளுக்கு வாய்மொழித் தேர்வுகள் நடந்தன. நடப்பு ஆண்டில் வழக்கமான அலுவல் பணி கூட்டங்களோடு 48 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுக் கூட்டங்களை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. சில நாட்களில் அதிகபட்சமாக 9 குழுமங்கள் முற்பகல் மற்றும் பிற்பகல் இயங்கின. மொத்தம் 383 கூட்டத் தொடர்கள் நடந்தன. 3,330 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

1997-98 ஆம் ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வுகளின் விவரங்கள் பின் இணைப்பு-5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## பகுதி-3

**தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாத பதவிகள்.**

*அறிக்கைக்குரிய ஆண்டில் 207 காலியிடங்களுக்குத் தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் அவை நிரப்பப்படவில்லை.*

| | பதவியின் பெயர் (1) | ப.வ. (2) | ப.பழ (3) | மி.பி.வ. (4) | பி.வ. (5) | பொ.போ. (6) | மொத்தம் (7) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | உரிமையியல் நீதிபதி | 11 | 1 | 6 | 6 | 5 | 29 |
| 2. | உதவி அறுவை மருத்துவர் | — | 7 | - | - | - | 7 |
| 3. | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/யுனானி) | 2 | - | 1 | - | - | 3 |
| 4. | வானொலி மேற்பார்வையாளர் | 1 | - | - | - | - | 1 |
| 5. | உதவி பல் மருத்துவர் | - | 1 | - | - | - | 1 |
| 6. | உந்தூர்திப் பொறியாளர் நிலை-2 | - | 1 | - | - | - | 1 |
| 7. | தொகுதி நான்கு பணிகள் (சுருக்கெழுத்து./தட்டச்சர்) | 141 | - | 4 | - | - | 145 |
| 8. | ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் - 1 | 19 | 1 | - | - | - | 20 |
| | மொத்தம் | 174 | 11 | 11 | 6 | 5 | 207 |

*இதன் விவரம் பின் இணைப்பு - 6இல் கொடுக்கப்பட்டுள்ளது.*

## பகுதி-4

**1. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல்**

*ஏப்ரல் 1, 1997 முதல் மார்ச் 31, 1998 வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார்நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்து குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 24 பணிகளில் 1248 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு 7-ல் கொடுக்கப்பட்டுள்ளது.*

2. ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள் முதலியன:

| | | |
|---|---|---|
| 1) | செயல் நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் (சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 1997ல் நிலுவையில் இருந்த 56 வழக்குகள் உட்பட) | 743 |
| 2) | அ. தேர்வாணையம் கருத்து தெரிவித்த வழக்குகள் | 548 |
| | ஆ. தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் | 62 |
| | இ. உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது. | 65 |
| | ஈ. சில ஆவணங்கள் அல்லது விவரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள். | 68 |
| 3. | வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் | 22 |
| | 1) அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் | 587 |
| | 2) அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணை பிறப்பித்த வழக்குகள் | 339 |
| | 3) அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் | 248 |

இ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் காலச் செலவழிவு

| | | மாதம் | நாட்கள் |
|---|---|---|---|
| 1) | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | | 339 |
| 2) | குற்றச்சாட்டு குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக் கோர அரசு எடுத்துக்கொண்ட சராசரி காலம் | 12 | 12 |
| 3) | தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தை தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரி காலம். | 3 | 7 |
| 4) | தேர்வாணையம் தனது கருத்தினை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக்கொண்ட சராசரி காலம். | 10 | 6 |
| | எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த சராசரி நேரம் | **25** | **25** |

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு இவைகளில் அலுவலர்களைத் தமது நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் கொண்ட வழக்குகள் என 587 வழக்குகளின் விவரம் பின் இணைப்பு 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3) சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்டு 1162 நிகழ்வுகளில் மாநில சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. ஒரு நிகர்வில் தேர்வாணையம் தன் இசைவினை அளிக்க மறுத்துள்ளது.

| வரிசை எண் மற்றும் பணி வகை (1) | இசைவு அளிக்கப்பட்டவை (2) | இசைவு மறுக்கப்பட்டவை (3) |
|---|---|---|
| 1. மாநிலப் பணி | 50 | — |
| 2. சார்நிலைப் பணி | — | — |
| 3. அமைச்சுப்பணி | 1115 | 1 |
| கூடுதல் | **1165** | **1** |

எப்பணிகளில் எந்தெந்த பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் பின் இணைப்பு 9ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 4) தற்காலிக நியமனங்கள்

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தின் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு 141 நபர்களைத் தற்காலிகமாக நியமனம் செய்து அந்நியமனங்கள் 24 மாதங்கள் வரை தொடர்வதற்குத் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது. 139 நபர்களின் நியமனம் 24 மாதங்களுக்கு மேல் தொடர அனுமதிக்கப்பட்டது.

| காலம் | இசைவு அளிக்கப்பட்டது | | இசைவு மறுக்கப்பட்டது | |
|---|---|---|---|---|
| | மாநிலப் பணிகள் | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் | மாநில பணிகள் | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் | 87 | 2 | - | - |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள் | 44 | - | - | - |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள் | 8 | - | - | - |
| 24 மாதங்களுக்கு மேல் | 139 | - | - | - |
| கூடுதல் | **278** | **2** | - | - |

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனங்கள் தொடர தேர்வாணையம் 139 நேர்வுகளில் இசைவு அளித்தமை குறித்த விவரங்கள் பின் இணைப்பு 10-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 5) விதி20 (ஏ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை

தமிழ்நாடு அமைச்சுப் பணிச் சிறப்பு விதி 20 (ஏ) (3)ன்படி அமைச்சுப்பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்குத் தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் எண்ணிக்கை 211 ஆகும். மற்றும் 17 நேர்வுகளின் இசைவு மறுக்கப்பட்டுள்ளது.

### 6) விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்

அரசால் 92 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 85 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 7 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்துக் கேட்டறியப்படவில்லை. அவை தேர்வாணையத்தின் உள்ளிட்டெல்லைக்கு உட்படாதவையாகவோ அல்லது இந்திய அரசியல் அமைப்பு பிரிவுக்கு 320 (3)-ல் படி தேர்வாணையத்தைக் கலந்தறியத் தேவையில்லாதவைகளாகவோ அமைந்துள்ளன.

### 7) விதி தளர்த்துதல்

அறிக்கைக்குரிய ஆண்டில் 121 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன. எந்த நேர்விலும் ஒய்வூதிய விதிகளைத் தளர்த்தவில்லை. அடிப்படை விதிகள் தமிழ்நாடு சிறப்பு ஊதியப்படி விதிகள் மற்றும் பயணப்படி விதிகள் ஆகியவற்றில் எந்த நேர்விலும் விதியைத் தளர்த்தி ஆணையிடப்படவில்லை மேலும் எந்த நேர்விலும் மதராஸ் பொது வருங்கால வைப்பு விதிகளைத் தளர்த்தி ஆணையிடப்படவில்லை.

## பகுதி - 5

## தெரிவுத் தேர்வுகள் தவிர இதரத்தேர்வுகள்

### 1) துறைத் தேர்வுகள்

1997 ஆம் ஆண்டு மே மற்றும் நவம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 258 தேர்வுகள் நடத்தப்பட்டன. 1,12,151 நபர்கள் விண்ணப்பித்தனர். இதன் விபரம்:

| | விபரம் | 1997 துறைத் தேர்வு | |
|---|---|---|---|
| | | மே | டிசம்பர் |
| 1. | மொத்த பாடங்கள் | 134 | 124 |
| 2. | தேர்வுத்தாள்களின் எண்ணிக்கை | 137 | 127 |
| 3. | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 58,266 | 53,885 |
| 4. | மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்கள் | 44,441 | 41332 |
| 5. | தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | 18,452 | 18,333 |
| 6.. | தேர்ச்சி சதவீதம் | 42 | 44 |

### 2) அரையாண்டுத் தேர்வுகள்

மாவட்ட உதவி ஆட்சியாளர், துணை ஆட்சியாளர், காவல்துறை அலுவலர் மற்றும் வனத்துறை அலுவலர் ஆகியோருக்கான அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலை தமிழ் மொழித்தேர்வு செப்டம்பர் 1997 மற்றும் மார்ச் 1998-ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 48 மற்றும் 50 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 3) சிறப்புத் தமிழ்த் தேர்வு

தமிழைத் தாய்மொழியாகப் பெறாத அகில இந்தியப் பணியைச் சார்ந்த அலுவலர்களுக்கான சிறப்புத் தமிழ் தேர்வு செப்டம்பர் 1997-ல் விளம்பரப்படுத்தப்பட்டதற்கு ஒருவரும் விண்ணப்பிக்கவில்லை.

### 4) டேராடூன் இந்திய பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வு

டேராடூனில் உள்ள இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 1997 மற்றும் பிப்ரவரி 1998-ல் தேர்வினை நடத்தியது. அதற்கு 196 மற்றும் 132 மாணவர்கள் முறையே விண்ணப்பித்தனர். அவர்களில் ஆகஸ்ட் 1997-ம் ஆண்டு தேர்வில் ஒருவர் மட்டும் தெரிவு பெற்றார். பிப்ரவரி 1998 தேர்வின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## பகுதி - 6

### அ. தேர்வாணைய கருத்தை அரசு ஏற்காமை.

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து 8 வழக்குகளில் மாறுபட்டுள்ளது. இதன் விவரங்கள் பின்வருமாறு:

### வழக்கு ஒன்று

1995 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் உதவி மருத்துவ பேராசிரியராகப் பணிபுரிந்த மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டின் மீது அரசு (சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை) தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. மேல்முறையீட்டாளர் தனது மேல்நாட்டு பணிக்கால நீடிப்பிற்கான அனுமதியினை அரசிடமிருந்து பெறத் தவறியதால் அவர் மீது தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (அ) வின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு 'கண்டனம்' தண்டனை வழங்கப்பட்டது. அத்தண்டனையை எதிர்த்து மருத்துவ பேராசிரியர் தொடுத்த மேல்முறையீட்டின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. தேர்வாணையம் மேல்முறையீட்டாளர் தன்னுடைய அயல்நாட்டு பணி நீட்டிப்பிற்கான அனுமதியினை பெற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ள காரணத்தால் அவருக்கு வழங்கிய கண்டனம் தண்டனையினை தள்ளுபடி செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

இதுபோன்ற நிகழ்வுகளில் மேல்முறையீட்டாளருக்குத் தண்டனை வழங்காமல் விட்டுவிட்டால் எதிர்காலத்தில் இத்தகைய தவறுகளைக் கண்டிக்க இயலாது எனும் வகையில் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை மறுபரிசீலனை செய்து அரசு வழங்கிய தண்டனையை உறுதி செய்யுமாறு தேர்வாணையத்தை அரசு கேட்டுக்கொண்டது. அரசின் கருத்தினை மறு ஆய்வு செய்த தேர்வாணையம் தான் முன்பு கூறிய கருத்தினையே வலியுறுத்தி மேல்முறையீட்டாளருக்கு வழங்கிய தண்டனையினை ரத்துச் செய்ய பரிந்துரை செய்தது.

அரசு தேர்வாணையத்தின் கருத்தினைப் பரிசீலனை செய்த பின்னர் இந்நிகழ்வில் மேல்முறையீட்டாளர் செய்த தவறுகளுக்காக அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தண்டனை அதிகம் இல்லை எனும் கருத்தின் அடிப்படையில் தேர்வாணையக் கருத்துக்கு மாறாக மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டினை நிராகரித்து அவருக்கு வழங்கப்பட்ட 'கண்டனம்' தண்டனை அவர் செய்த தவற்றுக்கு மிகையில்லை எனக் குறிப்பிட்டு அரசு ஆணை எண் 1418 சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை 16-10-96-ல் ஆணை வழங்கியது. உதவி மருத்துவ பேராசிரியர் தனது மேல்முறையீட்டில் லிபியா அரசு மருத்துவராக குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் பணிபுரிய வேண்டும் என நிர்ப்பந்தித்த காரணத்தால் வேறுவழியின்றி தன்னை மேலும் 1 வருடம் அயல்நாட்டில் (லிபியாவில்) பணிபுரிய அனுமதிக்குமாறு அரசுக்கு விண்ணப்பித்ததாகக் கூறியுள்ளார். மேலும் பதிவு அஞ்சல் மூலம் 31-3-87 அன்று (Overseas Manpower Corporation Ltd) 11-4-87 அன்று மருத்துவக் கல்வி இயக்குநருக்கும் 31-3-87 அன்று செயலர், சுகாதாரத் துறை, தமிழ்நாடு அரசுக்கும் தன்னுடைய நீட்டிப்பிற்கு அனுமதி கோரி விண்ணப்பம் அனுப்பியுள்ளார். தமிழக அரசு சுகாதாரச் செயலாளருக்கு 2-4-87 அன்று லிபியாவில் உள்ள இந்திய தூதரகத்தின் மூலம் தன்னுடைய நிலைமையை எடுத்துக்கூறி பதிவு அஞ்சல் அனுப்பியுள்ளார். அது தவிர லிபியா அரசு தொலை அச்சு மூலமாக அவரது பணி நீட்டிப்பின் அவசியத்தை தமிழ்நாடு அரசுக்கு டெலக்ஸ் நம்பர் 600 004, டெலக்ஸ் நம்பர் 8-182-87 சுகாதாரம் ஆல்கோம் லிபியா செயலாளரால் அனுப்பப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக பணி செய்தவர்களின் பொருட்டு லிபியா அரசு திரும்பிச் செல்வதற்கான கடவுச் சீட்டினை அளிக்க மறுத்தது எனவும் தெரிவித்துள்ளார். மேற்கூறிய கடிதங்கள் எவற்றிற்கும் தமிழ்நாடு அரசிடமிருந்து பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார் (Over seas Manpower Corporation Ltd) செலுத்த வேண்டிய 150 டாலர்களையும் தடையின்றித்தான் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அவர் அரசாணை 2211 சுகாதாரம் நாள் 16-11-88-ல் உள்ள பத்தி 9-ல் உள்ள விதிமுறையின்படி முன் நடவடிக்கை எடுத்துள்ள காரணத்தால் மேல்முறையீட்டாளரின் பக்கம் நியாயமிருப்பதாக தேர்வாணையம் கருதி அவரது மேல்முறையீட்டினை ஏற்று அரசு அவருக்கு வழங்கிய கண்டனம் தண்டனையினை ரத்து செய்ய அரசுக்கு பரிந்துரைத்தது. அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காமல் மாறாக மேல் முறையீட்டாளர்களின் மேல்முறையீட்டினை நிராகரித்து கண்டனம் தண்டனையை உறுதி செய்த செயல் தேர்வாணைய கருத்துக்கு மாறானது என்பது தெளிவு.

### வழக்கு 2

1994 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் மேற்படி துறையின் முதுகலைப் பட்டதாரி பாட ஆசிரியர்கள் மொழி ஆசிரியர்கள் (முதுகலை) மற்றும் உடற்கல்வி இயக்குநர்/ மகளிர் இயக்குநர் ஆகிய ஆசிரியர்/ ஆசிரியை பணியிடங்களைத் தேர்வு செய்யும் பணியினை கல்வித்துறையில் உள்ளவாறு, அதாவது கல்வித்துறையில் வழங்கப்படும் சலுகைகள் மற்றும் உத்தரவுகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பொருந்துவதாக அமைவதால் தேர்வாணையத்தின் உள்ளீட்டிலிருந்து நீக்கி "ஆசிரியர் தேர்வு வாரியத்திடம்" ஒப்படைக்கலாமா என்ற கருத்துக்கு தேர்வாணைய்ததின் ஆலோசனையைக் கோரியது. தேர்வாணையம் கவனமாக ஆழ்ந்து பரிசீலனை செய்து மேற்படி அரசின் கருத்துருவிற்கு

இசைவளிக்கவில்லை. ஏனெனில் அரசியலமைப்பின்படி அரசின் பல பணிகளுக்குத் தேவைப்படும் நபர்களைத் தெரிவு செய்ய வல்லுநர் அமைப்பாக (Expert body) தேர்வாணையம் விளங்கி ஒருபாற்கோடாமையாக செயல்படுவதாலும் மற்றும் அரசுத்துறை அலுவலர்களே அரசுக்குத் தேவையான ஆட்சேர்ப்புகளைச் செய்யும் பட்சத்தில் ஏற்படும் தடுமாற்றங்கள் (embarranment) இல்லாமல் செய்யவும் தேர்வாணையம் செயல்படுவதால் இத்தகைய பணியிடங்களை தெளிவான (Apparent) மற்றும் தகுந்த (Valid) காரணங்கள் இல்லாமல் தேர்வாணையத்தின் உள்ளீட்டிலிருந்து எடுக்கக்கூடாது என்று தெரிவித்து அரசுக்குத் தேர்வாணையம் தனது ஆலோசனையை அளித்தது. எனினும் அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு மேற்குறிப்பிட்ட பணியிடங்களைத் தேர்வு செய்யும் பணியினை "ஆசிரியர் தேர்வு வாரியத்திடன்" ஒப்படைத்து அரசாணை நிலை எண்.34, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந 7) துறை நாள் 25.2.97-ன் மூலம் ஆணை பிறப்பித்துள்ளது.

**வழக்கு-3**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை 16(பி) பிற்பகுதியின்படி புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரியும்போது காலமான திரு.வி. நாகராஜன் என்பவரின் மனைவி திருமதி நா. முத்துலஷ்மி என்பவரைக் கருணை அடிப்படையில் 14-5-87 முதல் இளநிலை உதவியாளர் பதவியில் முறையாக அமர்த்த அரசு 27-2-97 நாளிட்ட கடிதத்தின் மூலம் தேர்வாணையத்தை அணுகியது. இப்பொருள் குறித்துத் தேர்வாணையம் தன் பரிசிலனைக்கு எடுத்துக்கொண்டது. இந்நிலையில் இப்பொருள் குறித்து தேர்வாணையம் தன் இசைவினை அளிப்பதற்கு முன்னதாக அதாவது 3-6-97 நாளிட்ட (அரசாணை/இருபதாண்டுகள்/எண்127) ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணையில் மேற்கண்ட நபரின் பணியினை வரன்முறைபடுத்தி அரசு ஆணையிட்டுள்ளது.

தேர்வாணையத்தின் ஆணைக்குட்பட்ட பணியிடங்களில் கருணை அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு முன்னதாக தேர்வாணையத்தின் ஒத்திசைவினைப் பெறவேண்டும் என அரசாணை மற்றும் தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகளில் அறிவுறுத்தி இருந்தும்கூட தேர்வாணைய ஒத்திசைவைக் கோரி கருத்துரு அனுப்பிய அரசு தேர்வாணைய ஒத்திசைவு பெறும் முன்னரே வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிட்டிருப்பது விதிகளை மீறிய மற்றும் நடைமுறையில் உள்ள வழக்கினை மீறிய செயலாகும்.

**வழக்கு-4**

1994 ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அரசாங்க ஸ்டேன்லி மருத்துவ மனையில் சமூக சேவகியாக (முன்னாள்) பணிபுரிந்த திருமதி நசினி பேகம் (Nazini Begum) தனக்கு மருத்துவக்கல்வி இயக்குநரால் ஆணையிடப்பட்ட பணியறவு தண்டனையை எதிர்த்து அரசுக்கு அளித்த மேல்முறையீடு மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம் மேற்கூறப்பட்ட வழக்கின் தன்மையை ஆராய்ந்து அதிலுள்ள குறைபாடுகளை அரசுக்கு 10-10-94 தேதியிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்தது.

"மேல்முறையீட்டாளரின் மீது தமிழ்நாடு குடிமுறைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (பி)ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு அவருக்கு பணியறவு என்ற தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இவ்விதியின்படி பெருந்தண்டனை எவையேனும் வழங்கப்படும் பட்சத்தில் நேர்முக விசாரணை நடத்தப்படவேண்டும். ஆனால் இந்த வழக்கில் அவ்வாறு நேர்முக விசாரனை நடத்தப்படவில்லை. மேல்முறையீட்டாளர் வாய்மொழி விசாரணையை கோரியிருந்தார். எனவே விசாரணை அலுவலர் 21-12-90 அன்று வாய்மொழி விசாரணை மட்டும் நடத்தி அவருடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளார். அடுத்து 7-2-91 அன்று நடைபெற்ற விசாரணையின்போது விசாரனை அலுவலர் மற்ற இரு குற்றமுறையீட்டாளர்களான முகம்மது நஸாருதீன் மற்றும் சையத் இலியாஸ் ஆகியவர்களை விசாரனை செய்யும்போது மேல்முறையீட்டாளர் விசாரணை செய்யப்படவில்லை. ஆகையால் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய மேல்முறையீட்டாளருக்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. ஒழுங்கு நடைமுறைகளுக்கான கையேடு பகுதி 2-ல் அத்தியாயம் 3-ல் பத்தி 6 (2)-க்கு ஏற்ப குற்றஞ்சாட்டப்படுவதற்கு முன்பான முதனிலை விசாரணையில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க இன்றியமையாதது என்று கருதும் பட்சத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர் நடைபெறும் முறைப்படியான விசாரணைக்கு அச்சாட்சிகள் திரும்ப அழைக்கப்படவேண்டும். விசாரணை அலுவலரால் முதல் குற்ற முறையீட்டாளரான திரு அப்துல்லா விசாரணை செய்யப்படவில்லை. மேலும் முதனிலை விசாரணையின் அடிப்படையில் விசாரணை அலுவலர் விசாரணை அறிக்கையினை தயாரித்துள்ளார். மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் மேல்முறையீட்டாளர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையினை வழுவுள்ளதாக்குகிறது. ஆகையால் மருத்துவக் கல்வி இயக்குநரின் இறுதி ஆணையை இரத்துச் செய்து வழு ஏற்பட்ட இடத்திலிருந்து மீண்டும் புதிதாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசுக்குத் தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசு அரசாணை எண்(டி) 246, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 8-4-96 தேர்வாணையத்தின் ஆலோசனைக்கு மாறாக மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை ரத்துசெய்து ஆணை பிறப்பித்துள்ளது. அரசு

கீழ்க்கண்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்ட ஆணை பிறப்பித்துள்ளதாக தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

"திருமதி நசினி பேகம் (Najini Begam) பொது மக்களை ஏமாற்றுவது, ஊழல் (மற்றவர்களுடைய) போலியான கையொப்பமிடுவது மற்றும் மருத்துவமனையின் முத்திரையைத் தவறாக பயன்படுத்துவது போன்ற கடுமையான குற்ற செயல்களை புரிந்திருக்கிறார். அவர் எந்த பரிவுக்கும் ஏற்றவரல்ல. மேலும் இது நிர்வாகத்திற்கு ஊறுவினையளிப்பதாகும். ஆகையால் இவருடைய மேல்முறையீட்டை தள்ளுபடி செய்ய அரசு முடிவெடுத்துள்ளது".

## வழக்கு-5

1996-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் விபத்து மற்றும் அவசரப் பிரிவு மற்றும் எலும்பு சிகிச்சைப் பயிற்றாசிரியராகப் பணிபுரிந்த அலுவலர் மீதான வழக்கில் தேர்வாணையத்தின் கருத்தைக் கோரியது. குற்ற அலுவலர் தனது பணியின் கடமை தவறிய காரணத்தால் தமிழ்நாடு குடிமுறைப்பணிகளில் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (ஆ)-ன் கீழ் மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. விசாரனை அலுவலர் குற்றச்சாட்டு 1 பகுதியாக நிரூபணமாவதாகவும் குற்றச்சாட்டுகள் 2 மற்றும் 3 நிரூபணமாகவில்லை. என்றும் அறிக்கை அளித்தார். ஆனால் அரசு குற்றச்சாட்டுகள் 2 மற்றும் 3-ம் கூட நிரூபணமானதாகக்கூறி அதன் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய ஒழுங்கு நடவடிக்கையின்மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. தேர்வாணையம் மேற் கூறப்பட்ட அலுவலரது வழக்கினை ஆராய்ந்து அவருக்கு 'ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்குத் திரண்ட பயனுடன் நிறுத்தம்' தண்டனை வழங்குமாறு 1997-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கருத்துரு வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் ஆலோசனைக்கு மாறாக குற்ற அலுவலருக்கு 'கட்டாய ஓய்வு' தண்டனை வழங்கி அரசாணை எண் 986, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 7-8-97-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு கீழ்க்கண்ட காரணங்களைக் கருத்திற்கொண்டு தேர்வாணையக் கருத்திற்கு மாறுபட்டு ஆணை வெளியிட்டுள்ளது:-

(1) குற்ற அலுவலர் தமது அலட்சியப் போக்கின் மூலம் ஒரு நோயாளியின் உயிர் இழப்பிற்குக் காரணமாக இருந்துள்ளார்.

(2) இவரது பணியில் அக்கறையின்மையை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. இவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை பொருத்தமானதே என்பது ஒருபுறமிருக்க இம்மாதிரியான கடுந்தண்டனை மற்றவர்களுக்கும் ஒரு எச்சரிக்கையாகவும் அமையும்.

மற்றும்

(3) தேசிய மனித உரிமைகள் கழகம் இம்மாதிரியான தேர்வுகளை கடுமையான கண்ணோட்டத்துடன் நோக்குகின்றது. இறுதியில் அரசு இன்னலுக்குள்ளானவர்களின் குடும்பங்களுக்கு இழப்பு ஈட்டுத்தொகை வழங்கும் கட்டாய நிலைக்கு ஆளாகிறது.

வழக்கின் சூழலையும் தன்மையையும் நோக்குங்கால் குற்ற அலுவலருக்குத் திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தம் போன்ற குறைவான தண்டனை வழங்குவதே பொருத்தமாகும். இதனைக் கருத்திற்கொண்டு இத்தேர்வில் குற்ற அலுவலருக்கு 'ஊதிய உயர்வைத் திரண்ட பயனுடன் மூன்றாண்டுகளுக்கு நிறுத்தம்' தண்டனை வழங்குமாறு அரசுக்குத் தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் ஆலோசனைக்கு மாறாக ஆணை வெளியிட்டுள்ளது.

## வழக்கு 6

1997 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அரசு உள் (எஸ்.சி) துறை பாளையம் கோட்டை கோட்டத் தீயணைப்பு அலுவலராக பணிபுரிந்த அலுவலர் சமர்ப்பித்த மறு ஆய்வு மனு மீது தேர்வாணையத்தின் கருத்தை கோரியது. வழக்கினை ஆராய்ந்த தேர்வாணையம், ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்த தண்டனை அதிகபட்சமானது என்பதுடன் அது அன்னாரின் ஓய்வூதியத்தையும் பாதிக்கும் என்பதால் வழங்கப்பட்ட தண்டனையை மாற்றி ஊதியஉயர்வு நிறுத்தம் ஓராண்டிற்கு திரண்ட பயனுடன் நிறுத்தி வைக்கலாம் என்று அரசுக்கு ஆலோசனை வழங்கியது. இத்தண்டனை அன்னாரின் ஓய்வூதியத்தை பாதிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

தேர்வாணையம் இத்தேர்வில் அரசிற்கு வழங்கிய கருத்துக்களுக்கு மாறாக அன்னார் புரிந்துள்ள குற்றத்தின் தன்மைக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தண்டனையான ஊதிய உயர்வு, இரண்டு ஆண்டுகளுக்குத் திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்தது சரியே என்று குறிப்பிட்டுள்ளது மேலும், தேர்வாணையத்தின் கருத்துப்படி அன்னாரின் ஓய்வூதியத்தை பாதிக்கும் என்ற காரணத்திற்காக தண்டனையை மாற்ற வேண்டியதில்லை என்று அரசு கருதுவதாகக் குறிப்பிட்டு அதன் படியே அரசு ஆணை 2 (டி) எண். 246, உள் (எஸ்.சி) துறை, நாள் 27-10-97-ல் ஆணை வெளியிட்டுள்ளது.

**வழக்கு-7**

திருத்தணி அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலராகப் பணிபுரிந்த மருத்துவ அலுவலர் ஒருவர் தனக்கு அரசால் வழங்கப்பட்ட இரண்டாண்டுகளுக்கான திறன் விளைவுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தம் என்ற தண்டனையை எதிர்த்து அரசுக்குச் செய்து கொண்ட மனு மீது 1993-ம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் அரசு (சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை) தேர்வாணையத்தின் கருத்தைக் கோரியது. தேர்வாணையம் மேற்கூறப்பட்ட அலுவலரது வழக்கினை ஆராய்ந்து அவருக்கு வழங்கப்பட்ட இரண்டாண்டுகளுக்கான திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தம் என்ற தண்டனை கடுமையானதாகவும் மிகவும் அதிகமானதாகவும் உள்ளதாகத் தெரிவித்து அதனை மூன்று மாதங்களுக்குத் திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் என்ற தண்டனையாக மாற்றம் செய்யலாம் என்று 1994-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கருத்துரு வழங்கியது.

தேர்வாணையத்தின் கருத்தினைப் பெற்ற அரசு, தனது 18-8-94 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரது மனுவின் மீதான கருத்துகளை தேர்வாணையத்திடம் அரசு கோரியதைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாகக் கருதுமாறு தேர்வாணையத்தைக் கேட்டுக் கொண்டதுடன் அரசாணை எண் 507, சுகாதாரம் நாள் 4-4-91-ல் விதிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்கான திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தம் எனும் தண்டனையானது மனுதாரர் இழைத்த குற்றத்திற்குத் தகுந்ததே என்று தெரிவித்தது. மனுதாரரின் மனுவை நிராகரித்து அரசாணை(டி) எண். 679, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் 22-8-94-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசுக்கும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கும் இடையே நடைபெற்ற கருத்துப் பரிமாற்றங்கள் குறித்து 22.8.94 நாளிட்ட மேற்கண்ட அரசாணையில் குறிப்பிடப்படவில்லை. மேலும் தேர்வாணையத்தின் இந்நேர்வு குறித்த கருத்தும் அரசாணையில் இடம் பெறவில்லை. இந்நேர்வில் அரசு பின்வரும் காரணங்களைக் கருத்திற்கொண்டு தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு ஆணை வெளியிட்டுள்ளது:-

1. மனுதாரர் தன் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணத்திற்காக அவர் செய்துகொண்ட மேல்முறையீடு சட்டபூர்வ மனு அல்ல.
2. சட்டபூர்வ மனுவாக இல்லாததன் காரணத்தினாலும் மனுதாரருக்கு அளித்த தண்டனையானது அவர் இழைத்த குற்றத்திற்கு ஏற்றதாக இருப்பதனாலும் மனுதாரருக்கு அளித்த தண்டனையை மாறுதல் செய்ய வேண்டிய அவசியமில்லை.
3. மனுதாரர் செய்துகொண்ட மனுவை நிராகரிக்கவும் இந்நேர்வில் தேர்வாணையத்தின் கருத்துக் கோரலைத் திரும்பப் பெறுவதற்கும் அரசு எடுத்த முடிவு தேர்வாணையத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. தேர்வாணையத்தின் கருத்திலிருந்து அரசு மாறுபட்டுள்ளது என்பதோ அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் விதி 19ன்படி தேர்வாணையம் தெரிவித்துள்ள கருத்துக்கள் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்பதோ மேற்கூறிய காரணங்களால் எழவில்லை.

தேர்வாணையம் இவ்வழக்கின் தன்மையை நன்கு ஆய்வு செய்த பின்னரே மனுதாரருக்கு வழங்கப்பட்ட இரண்டாண்டு திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையை மூன்று மாதங்களுக்குத் திரண்ட பயனற்ற ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாக மாற்றம் செய்து ஆணை வெளியிடலாம் என்று அரசுக்குக் கருத்துத் தெரிவித்தது. ஒரு ஒழுங்கு நடவடிக்கை மீது தேர்வாணையத்தின் கருத்துக்களை அரசு கோரிப் பெற்ற பின் அந்த ஒழுங்கு நடவடிக்கையில் தேர்வாணையத்தின் கருத்தை ஏற்றுக்கொண்டோ அல்லது மறுதலித்தோ ஆணை வழங்குவது அரசின் உரிமைக்குட்பட்டது. ஆனால் இந்நேர்வைப் பொறுத்தவரை அரசு தேர்வாணையத்தின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளாமல் இறுதி ஆணை வெளியிட்டுள்ளது. தேர்வாணையத்தின் பரிந்துரையின் நகல் ஒன்றினையும் மனுதாரருக்கு அரசாணையுடன் அனுப்பி வைக்கவில்லை. ஏன் தேர்வாணையத்தின் கருத்துக்களடங்கிய கடித நகல் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று தேர்வாணையம் வினவியபோது, தேர்வாணையத்தின் கருத்துக்களைக் கோரி அரசால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தினைத் திரும்பப் பெறப்பட்டதாகக் கொள்ளுமாறு அரசு தேர்வாணையத்திற்குத் தெரிவித்துள்ளது. தேர்வாணையத்தின் கருத்துக்களைப் பெற்றபின் (அதை ஏற்றோ அல்லது மறுதலித்தோ ஆணை வெளியிடாமல்) தேர்வாணையத்திடம் கருத்துக்கோரிய அரசுக் கடிதத்தினைத் திரும்பப் பெறப்பட்டதாகக் கொள்ளுமாறு கூறியதுடன் மனுதாரரின் மனுவை நிராகரித்து ஆணை வெளியிட்டுள்ளது ஏற்றுக்கொள்ளவியலாத ஒன்று ஆகும். மேலும் அரசியலமைப்புச் சட்டம் விதிமுறை 320 (3) (சி)க்கு முரன்பட்ட செயல் என்று தேர்வாணையம் கருதுகிறது.

**வழக்கு-8**

திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் பணியாற்றி வந்த உதவி மருத்துவர் ஒருவரும், தூத்துக்குடி தலைமையிடத்து மருத்துவமனையில் பணியாற்றி வந்த உதவி மருத்துவர் ஒருவரும் குடும்ப கட்டுபாடு அறுவை சிகிச்சையில் கவனக்குறைவாக சிகிச்சை அளித்ததால், நோயாளிகள் இறந்ததைத் தொடர்ந்து அவ்வுதவி மருத்துவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஆணை பிறப்பிப்பது குறித்து அரசு கடந்த 1996-ம் ஆண்டு ஜூலைத்

திங்களில் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. தேர்வாணையம் இந்நேர்வுகளை நன்கு ஆராய்ந்தது. முதலாவது உதவி மருத்துவரைப் பொறுத்தவரைக்கும் நோயாளியின் இறப்புக்கு அன்னார் மட்டுமே முற்றிலும் பொறுப்பாக மாட்டார் என்பதும் இதற்கு மற்ற மருத்துவர்களும் பொறுப்பாவார்கள் என்பதையும் தேர்வாணையம் கண்டறிந்தது. வழக்கில் சூழ்நிலையையும் உதவி மருத்துவரின் வயதினையும் (39 ஆண்டுகள்) அன்னார் பணிபுரிந்துள்ள காலத்தையும் (7 ஆண்டுகள்) கருத்திற்கொண்டு அவருக்கு 'சம்பளத்தை உதவி மருத்துவர் பதவிக்கான சம்பள விகிதத்தில் அடிப்படை நிலைக்கு ஐந்து ஆண்டு காலத்திற்கு குறைத்தல்' என்றும் தண்டனை வழங்கலாம் எனத் தேர்வாணையம் கருதியது. அவ்வாறே அன்னாருக்கு 'சம்பளத்தை உதவி மருத்துவர் பதவிக்கான சம்பள விகிதத்தில் அடிப்படை நிலைக்கு திரண்ட பயனுடன் ஐந்து ஆண்டு காலத்திற்கு குறைத்தல் தண்டனை வழங்கி ஆணை பிறப்பிக்கலாம் என தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

இரண்டாவது உதவி மருத்துவ அலுவலரைப் பொறுத்தவரை அன்னாரின் கவனக் குறைவான சிகிச்சையால் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 1 இலட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்கக்கோரி தேசிய மனித உரிமைக்கழகம் பரிந்துரைத்ததைத் தொடர்ந்து அரசு மேற்கொண்ட தொகையை இறந்துவிட்டவரின் குடும்பத்திற்கு வழங்கியது. அரசுக்கு இவ்வகையில் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுவதற்கு இரண்டாவது மருத்துவ அலுவலரிடமிருந்து மேற்கண்ட தொகையை பிடித்தம் செய்ய அரசு ஆணையிட்டிருந்தது. இவ்வாறு பிடித்தம் செய்தலை அன்னார் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் ஒரு அம்சமாக்கி அதற்கு அவரின் முகாந்திரத்தைப் பெற்ற பின்னரே ஆணை வெளியிட்டிருக்க வேண்டும். இவ்விடுபாட்டினால் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை வழுவுள்ளதாகிறது என்று தேர்வாணையம் கருதியது. எனவே, மேற்கண்ட வழு ஏற்பட்ட இடத்திலிருந்து புதியதாக ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, வழக்கினை தொடர்ந்து இறுதியில் தேர்வாணையத்திற்கு அதன் கருத்திற்காக அனுப்பி வைக்கும்படி தேர்வாணையம் அரசைக் கேட்டுக் கொண்டது.

ஆனால் அரசு மேற்கண்ட இரு வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இரு உதவி மருத்துவர்களுக்கும் பணி நீக்கம் தண்டனை வழங்கி அரசாணை (டி) எண்.23, சுகாதாரம் மற்றும் குடும்பநலம் நாள் 6.1.98 மற்றும் அரசாணை (டி) எண் 22 சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் நாள் 6-1-98-ல் ஆணையிட்டது. அரசு இவ்விதம் தேர்வாணையத்தின் கருத்துக்களுக்கு புறம்பாக ஆணையிட்டுள்ளதற்கு கீழ்க்கண்ட காரணங்களைக் கூறியது:-

முதலாவது உதவி மருத்துவரை பொறுத்தவரை, அன்னார் நோயாளியின் உடம்பில் இருந்த (பவல் ரணம் Bowel Injuring) நன்றாக தெரிந்தும் அந்த ரணத்தைக் கவனிக்கத் தவறிவிட்டார். அவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் ஆகிறது. நிரூபணமான குற்றச் சாட்டிற்காக அவருக்கு 'பணி நீக்கம்' தண்டனையே சரியான தண்டனையாகும்.

இரண்டாவது உதவி மருத்துவரைப் பொறுத்தவரை அன்னாரிடமிருந்து இழப்பீட்டுத் தொகையை வசூலிப்பதற்கும், அவருக்கு நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கான தண்டனை வழங்குவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அவர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் எவ்வித நடைமுறை குறைபாடும் இல்லை. மேலும், அன்னார் தம்மிடமிருந்து இழப்பீட்டுத்தொகையை வசூலிக்க பிறப்பித்த ஆணையை எதிர்த்து தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். விஷயம் தற்போது நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால், தேர்வாணையம் சுட்டிக்காட்டியிருப்பதுபோல் 'பிடித்தம்' பிரேரணையை குற்றச்சாட்டின் ஒரு பகுதியாக்கி, புதிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை.

முதலாவது உதவி மருத்துவர் சம்பந்தப்பட்ட வழக்கில் தவறு ஏற்பட்ட சூழ்நிலையினை கருத்திற்கொள்ளும்போது அன்னார் புரிந்த விடுபாடு அவ்வளவு கடுமையானது அல்ல என்பது தெளிவு. இதனடிப்படையில் அன்னாருக்கு சம்பளத்தை உதவி மருத்துவர் பதவியின் சம்பள விகிதத்தில் அடிப்படை நிலைக்கு ஐந்தாண்டு காலத்திற்கு குறைத்தல் என்ற குறைந்த தண்டனை வழங்கலாம் என அரசுக்கு தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது. இரண்டாவது உதவி மருத்துவர் விஷயத்தில் 'பிடித்தம்' பிரேரணையை ஒழுங்கு நடவடிக்கை வழக்கின் ஒரு பகுதியாக்கி அதன் மூலம் அன்னாருக்கு தமது தற்காப்பு விளக்கம் அளிக்க சந்தர்ப்பம் வழங்கலாம் என்ற நோக்கில் புதியதாக ஒழுங்கு நடவடிக்கை தொடருமாறு தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் மேற்கண்ட இரு நேர்வுகளிலும், அரசு தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக ஆணை பிறப்பித்துள்ளது.

### ஆ. தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை:

அரசு தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் எந்த வழக்கிலும் செயல்படவில்லை.

இ. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாகத் தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி ஆணையிட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர் காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்த ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு 11-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஏற்புரை:**

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்குப் போதிய இட வசதி செய்து கொடுத்து, மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு பொறுப்பாட்சிகள் கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்ட தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்கள் ஆகியோருக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

பணியமர்த்தம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரிய வேட்பாளர்களை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு துறை அரசு செயலாளர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

| | |
|---|---|
| திரு. து. முருகராஜ், இ.ஆ.ப. (ஓய்வு) | .. தலைவர் |
| திரு. ஆர். வேலு, இ.ஆ.ப. (ஓய்வு) | .. உறுப்பினர் |
| திரு. ஆர். குருசாமி, பி.ஏ.,பி.எல். | .. உறுப்பினர் |
| பேராசிரியர் ஜி. அரங்கநாதன் எம்.ஏ.,எம்.பில். | .. உறுப்பினர் |
| பேராசிரியர் டாக்டர் எஸ். பாலசுப்பிரமணியன் எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,டி.எஸ்.எஸ். | .. உறுப்பினர் |
| திரு. எம். நாகூர் மீரான், பி.எஸ்சி, பி.எல். | .. உறுப்பினர் |
| டாக்டர் (திருமதி) ஜோதிபாய் செல்வின்ராஜ் எம்.எஸ்சி.,பி.எச்.டி.எம்.எட்., | .. உறுப்பினர் |
| திரு. ஆர். சுந்தரம், பி.ஏ., பி.எல். | .. உறுப்பினர் |
| திரு. எம். மணி, இ.கா.ப. (ஓய்வு) | .. உறுப்பினர் |

தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம், சென்னை-2.

ஆர். குப்புசாமி இ.ஆ.ப.
செயலாளர்

நாள்: 4-8-1998

## பின் இணைப்பு-1

### (தொடர்புப் பகுதி-1)

**31-3-1998-இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | துணைச் செயலாளர் | .. | 4 |
| 2. | சார் செயலாளர் | .. | 39 |
| 3. | கணக்கு அலுவலர் | .. | 1 |
| 4. | உதவி கணக்கு அலுவலர் | .. | 1 |
| 5. | ஆராய்ச்சி அலுவலர் | .. | 1 |
| 6. | நூலகர் | .. | 1 |
| 7. | முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர் | .. | 2 |
| 8. | பிரிவு அலுவலர் | .. | 116 |
| 9. | உள்ளீடு/விளையளவு மேற்பார்வையாளர் (கணிப்பொறி) | .. | 1 |
| 10. | உள்ளீடு/விளையளவு இயக்குபவர் (கணிப்பொறி) | .. | 1 |
| 11. | அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி) | .. | 8 |
| 12. | கணக்கர் | .. | 26 |
| 13. | உதவிப்பிரிவு அலுவலர் | .. | 221 |
| 14. | நேர்முக உதவியாளர் | .. | 11 |
| 15. | தொலைபேசி இயக்குபவர் | .. | 2 |
| 16. | உதவியாளர் | .. | 227 |
| 17. | தட்டச்சர் | .. | 46 |
| 18. | ஊர்தி ஓட்டுநர் | .. | 12 |
| 19. | பதிவறை உதவியாளர் | .. | 2 |
| 20. | பதிவறை எழுத்தர் | .. | 42 |
| 21. | மின்தூக்கி இயக்குபவர் | .. | 1 |
| 22. | படிப் பெருக்கி இயக்குபவர் | .. | 1 |
| 23. | முதன்மை ஏவலர் | .. | 1 |
| 24. | அலுவலக உதவியாளர் | .. | 90 |
| 25 | காவலர் | .. | 6 |
| 26. | பெருக்குபவர் | .. | 4 |
| 27. | துப்புரவு பணியாளர் | .. | 3 |
| 28. | குடிநீர் வைப்பவர் | .. | 1 |

# பின் இணைப்பு-2

(தொடர்பு பகுதி-2

## நேரடித் தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் பற்றிய விவரம் 1997-1998

| வரிசை எண். | பதவி மற்றும் துறையின் பெயர். | விண்ணப்பம் பெற்ற கடைசி நாள் | தேர்வு முடிவுகள் தெரிவிக்கப் பட்ட நாள் | காலியிடங்களின் எண்ணிக்கை. | | | | | | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | | | | | | முதல்நிலை தேர்வில் கலந்து கொண்டவர்கள். | | | | | | முதன்மைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள். | | | | | | வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள். | | | | | | தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள். | | | | | | தெரிவு பெற்றவர்களின். கல்வித் தகுதி. | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ப.வ | ப.பழ. | மிபிவ | பிவ | பொது | கூடுதல் | ப.வ. | ப.பழ. | மிபிவ | பிவ | மற்ற | கூடுதல் | ப.வ. | ப.பழ. | மிபிவ | பிவ | மற்ற | கூடுதல் | ப.வ. | ப.பழ. | மிபிவ | பிவ | மற்ற | கூடுதல் | ப.வ. | ப.பழ. | மிபிவ | பிவ | மற்ற | கூடுதல் | ப.வ. | ப.பழ. | மிபிவ | பிவ | மற்ற | கூடுதல் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) | (28) | (29) | (30) | (31) | (32) | (33) | (34) | (35) | (36) | (37) | (38) | (39) | (40) | (41) | (42) |
| | **மாநிலப் பணிகள்** | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 1. | பிரிவு தலைவர் (இயக்ககம்) தமிழ்நாடு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தொழில் நுட்ப பயிற்சி நிலையம் | 30-10-89 | 04-4-97 | - | - | - | - | 1 | 1 | - | - | - | - | - | 5 | 1 | - | - | - | - | - | 1 | - | - | 1 | - | 2 | 1 | - | - | 1 | - | 2 | 1 | - | - | - | - | 1 | இயக்குதலில் மற்றும் திரைக் கதை எழுதுதலில் பட்டயம் மற்றும் பட்டயம் கிராமப்பணியில் - 1 | |
| 2. | உளவியல் வல்லுநர் தமிழ்நாடு சிறைத் துறை பணிகள் | 06-11-96 | 22-4-97 | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | 29 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 19 | 1 | - | - | 1 | - | 2 | 1 | - | - | - | - | 1 | எம்.ஏ. (உளவியல்) பி.எல்-1 | |
| 3. | நுண்ணிய உயிரியலாளர். தமிழ்நாடு பொது சுகாதாரப் பணி | 22-12-96 | 23-6-97 | - | - | - | - | - | 3 | - | - | - | - | - | 72 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 50 | 2<br>(2) | - | 1<br>(1) | 2<br>(1) | 2<br>(2) | 7<br>(6) | 2<br>(2) | - | - | 1 | - | 3<br>(2) | எம்.எஸ்.சி. (நுண் உயிரியல்). 3 | |
| 4. | உதவி அறுவை மருத்துவர், தமிழ்நாடு மருத்துவப் பணி (பொது மற்றும் துறை வல்லார்) | 05-02-97 | 02-09-97<br>பெண்கள் | 143<br>(38) | 10<br>(2) | 172<br>(42) | 212<br>(63) | 220<br>(66) | 757<br>(211) | - | - | - | - | - | 5074 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 4114 | 292 | 3 | 349 | 439 | 440 | 1523 | 143<br>(38) | 3 | 173<br>(48) | 368<br>(112) | 63<br>(31) | 750<br>(229) | எம்.பி.பி.எஸ் - எம்.எஸ்.எம்.டி., டி.ஜி.ஒ.- டி.பிஎம்.டி, ட்டி.ஆர்டி - டி.ஒ- டி.எ - டி.சிஎச்- டி.சி.ம்பி - டி.என்.பி. | ஏழு பழங்குடியினருக்கான காலியிடத்திற்குப் பொருத்தமான தகுதி உடைய வேட்பாளர்கள் கிடைக்கவில்லை. 157 பி.வ. பகிரங்கப் போட்டியில் தேர்வு பெற்றனர். |
| 5. | உரிமையியல் நீதிபதி (இளநிலை பகுதி நடுவர் முதல்வகுப்பு குற்றவியல் நீதிபதி) | 29-04-97 | 02-09-97<br>பெண்கள் | 17<br>5 | 2<br>(1) | 20<br>(6) | 30<br>(9) | 31<br>(9) | 100<br>(29) | - | - | - | - | - | 3436 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 2775 | 58 | 2 | 72 | 156 | 8 | 295 | 6<br>(2) | 1<br>(1) | 16<br>(3) | 45<br>(10) | 3<br>(1) | 71<br>(17) | பி.எல் -25-பிஎ.பி. எல்.10 பி.ஏ. எல்.எல்-2, பி எஸ் சி. பி.எல்-19 பி. காம், பி.எல்-3, எம்.காம், பி.எல்-1, எம் ஏ.எம்.எல்-10, பிஎல்.எல்.எல் டி.எல். ட்டி. டி.சி.எல்-1 | 21. பி.வ. மற்றும் 2 மி.பி. வகுப்பினர் பகிரங்கப் போட்டியில் தெரிவுப் பெற்றனர். |
| | **தமிழ்நாடு நீதித்துறைப் பணி** | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 6. | உதவிப் பொறியாளர் (சிவில்) நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை | 03-01-96 | 19-09-97<br>பெண்கள் | 39<br>(12) | 2 | 44<br>(13) | 65<br>(20) | 67<br>(20) | 217<br>(65) | - | - | - | - | - | 3397 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 2640 | 118 | 8 | 178 | 305 | 11 | 620 | 39<br>(12) | 2 | 53<br>(17) | 115<br>(32) | 8<br>(4) | 217<br>(65) | எம்.இ.1, பி.இ (சிவில்) 200 ஏ.எம்.ஐ.இ-13. | 50 பி. வகுப்பினர் பகிரங்கப் போட்டியில் தெரிவுப் பெற்றனர். |
